உடனடி வெளியீட்டுக்காக

# கனடா நாட்டில் பொருளாதார அதிகாரமளித்தல் மற்றும் கறுப்பர் இன மக்கள் மீதான நிறவெறி எதிர்ப்பு ஆகியவற்றுக்கு தீர்வு காண, ப்ராம்ப்ட்டன் நகரம் தனது முதலாவது மெய்நிகர் மாநாட்டை உபசரித்து நடத்துகிறது

***இந்தப் பிரச்சனைகளுக்கு தீர்வு காண ,தேசிய அளவில் நகராட்சிகளை கூட்டணியாக்குவதற்காக நகர நிர்வாகம் முன்னணி வகிக்கிறது .***

ப்ராம்ப்ட்டன், ON (நவம்பர் 10, 2020) – நவம்பர் 10 ஆம் தேதி செவ்வாய்க்கிழமையன்று ப்ராம்ட்டன் நகர நிர்வாகம் தனது முதலாவது மெய்நிகர் பொருளாதார அதிகாரமளித்தல் மற்றும் கறுப்பர் இன மக்கள் மீதான நிறவெறி எதிர்ப்பு மாநாட்டை உபசரித்து நடத்துகிறது; இதில் கனடாவில் இருக்கின்ற கறுப்பின சமுதாயத்தினர் மீதான இனவெறி எதிர்ப்பு மற்றும் பொருளாதார அதிகாரமளித்தல் ஆகியவற்றுக்கு தீர்வு காண்பதற்கான ஒரு தேசிய கூட்டமைப்பை உருவாக்க இருக்கிறது.

இந்த மெய்நிகர் ஒருநாள் மாநாடானது, ஒன்ட்டேரியோ பகுதியில் இருக்கும் பல நகராட்சிகள், மற்றும் சொலிசிட்டர் ஜெனரல் மற்றும் இனவெறிக்கு பொறுப்பான அமைச்சர் ஆக இருக்கின்ற ஸில்வியா ஜோன்ஸ், மற்றும் கனடா அரசாங்கத்தின் இனவெறி எதிர்ப்பு செயலகத்தின் இயக்குனர் பீட்டர் ஃப்ளெகல் உள்ளிட்ட கறுப்பின சமூகத் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளை ஒன்றிணைக்கும். நகராட்சி பிரதிநிதிகள் ஒன்று சேர்ந்து, கறுப்பின மக்களுக்கு இருக்கும் தடைகளை உடைப்பதற்கான உத்திகள் குறித்து விவாதிப்பார்கள். இந்த மாநாட்டை பின்வரும் அமைப்புகள் பெருமையுடன் ஆதரிக்கின்றன:

- டர்ஹாம் பிராந்தியம்
- ஹாமில்ட்டன் மாநகரம்
- மார்க்ஹாம் மாநகரம்
- லண்டன் மாநகரம்
- பீல் பிராந்தியம்
- ஷெல்பர்ன் நகரம்
- டோரோன்ட்டோ மாநகரம்
- வாகன் மாநகரம்
- ஒன் ட்டேரியோ நகராட்சிகளின் சங்கம்
- கனடா நாட்டு நகராட்சிகளின் கூட்டமைப்பு
- கறுப்பின சமுதாயத்தினரின் முன்னேற்றத்திற்கான நெட்வொர்க்

கறுப்பர் மீதான இனவெறியை ஒழிப்பதற்கும், கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்புக்கான ஆதாரவளங்களை அடைவதற்கான ஒரு ஆதரவு மற்றும் தகவல் தளத்தை உருவாக்குவதில் இந்த விவாதம் கவனம் செலுத்தும்; அறிவு பகிர்வு, மற்றும் எதிர்கால முனைப்புக்களை

ஊக்குவிக்கின்ற வலுவான கூட்டாண்மைகளை உருவாக்குவது, இதற்கான குறிக்கோளாக மனதில் கொள்ளப்படும். இந்த மாநாடானது, கனடா முழுவதும் உள்ள கறுப்பின சமூகங்களுக்கு பொருளாதார ரீதியாக வலு சேர்ப்பது மற்றும் கறுப்பர் இனம் மீது கொண்ட இனவெறிக்கு தீர்வு காணுமுகமாக, நகராட்சிகளின் தேசிய கூட்டணியை முறைப்படுத்துவதற்கான முதல் படியாகும்.

இந்த மாநாடானது, இந்த நகரம் உபசரிப்பு தருகின்ற இரண்டு மாநாடுகளில் ஒன்றாகும். இரண்டாவது மாநாடு டிசம்பர் மாதத்தில் நடைபெறும், மற்றும் அதில் பொருளாதார அதிகாரமளிப்பு மீது கவனம் செலுத்தும்.

கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்புக்கான முனைப்புக்கள் மற்றும் ப்ராம்ட்டன் நகர கறுப்பர் இன ஆப்பிரிக்க, கரீபிய சமூகம், கலாச்சாரம் மற்றும் பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்புக்கான அமைப்பு பற்றி மேலும் அறிய வருகை தரவும்: brampton.ca/antiblackracism.

**ப்ராம்ட்டன் நகர கறுப்பர் இன ஆப்பிரிக்க, கரீபிய சமூகம், கலாச்சாரம் மற்றும் பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்புக்கான அமைப்பு பற்றி**

ஜூன் 10, 2020 அன்று, ப்ராம்ட்டன் நகர கறுப்பர் இன ஆப்பிரிக்க, கரீபிய சமூகம், கலாச்சாரம் மற்றும் பொருளாதார அதிகாரமளிப்பு, மற்றும் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்புக்கான அமைப்புக்கு  நகர சபை ஒப்புதல் அளித்தது. மூத்த ஆலோசகராகிய, க்வினெத் சாப்மன் தலைமையில், ப்ராம்ப்ட்டன் நகரில்  கறுப்பர் மீதான புரையோடிப்போன இனவெறியை ஒழிப்பதற்கான செயல் திட்டத்தை உருவாக்கி செயல்படுத்துவதற்கு இந்த பிரிவு பொறுப்பாகிறது. உள்ளூரில் சமூக ஈடுபாட்டுடன்  பங்கெடுப்பவர்களால் வழிநடத்தப்படும் இந்த அமைப்பு, ப்ராம்ப்ட்டனின் கறுப்பர் இன சமூகத்தின் சமூக, கலாச்சார மற்றும் பொருளாதார நிலையை மேம்படுத்துவதை மையமாகக் கொண்டு பணியாற்றும்.

கறுப்பர் இனம் மீதான இனவெறி எதிர்ப்புக்கான அமைப்பை நகர நிர்வாகம் உருவாக்கும்போது அது பற்றி மேலும் தெரிந்துகொள்வதற்கு, மற்றும் அதில் ஈடுபாடு கொண்டிருப்பதை வெளிப்படுத்துவதற்கு,  தயவு செய்து  இந்த மின்னஞ்சலில் தொடர்பு கொள்ளவும்: economicantiblackracism@brampton.ca.

**அறிஞர் கூற்றுக்கள்**

“ ப்ராம்ப்ட்டன் நகரம் பல தரப்பட்ட மக்கள் கொண்ட ஒரு மொசைக் நகரம்;  ஒரு மாறுபட்ட மற்றும் அனைத்தையும் உள்ளடக்கிய நகரமாக இருப்பதில் நாம்பெருமிதம் கொள்கிறோம். இந்த கோடைப்பருவத்தின் தொடக்கத்தில், ப்ராம்ட்டன் நகர கறுப்பர் இன ஆப்பிரிக்க, கரீபிய சமூகம், கலாச்சாரம் மற்றும் பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் மீதான இனவெறி

எதிர்ப்புக்கான அமைப்பை நிறுவ, நகரசபை ஒப்புதல் அளித்தது. இந்த ஆண்டில் ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் நடத்துகின்ற இரண்டு மாநாடுகளில் இதுவே முதலாவது மாநாடாகும்; இதில் அனைவரும் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டு, கிடைக்கும் ஆதார வளங்களை அனைவரும் அணுகுவதற்கான ஒரு தகவல்தொடர்பு தளத்தை கூட்டாக உருவாக்குவதற்கு ஒரு பாதுகாப்பான இடத்தை வழங்கும் என்று எனக்குத் தெரியும். ப்ராம்ப்ட்டனிலும், நாடு முழுவதிலும் உள்ள கறுப்பர் இன சமூகத்திற்கு எதிரான இனவெறியை புரிந்து கொள்வதற்கும் அதனை ஒழிப்பதற்கும் இந்த மாநாடு ஒரு முக்கியமான நிகழ்வாகும். ”

- *பேட்ரிக் ப்ரவுன், மேயர், ப்ராம்ப்ட்டன் நகரம்*

“இந்த மாநாடானது மாகாணம் முழுக்கவும் உள்ள பன்முகத்தன்மை மற்றும் பலதரப்பினரையும் உள்சேர்ப்பதற்காக வேலை செய்கின்ற வகையில் நகராட்சிகளின் பிரதிநிதிகளை ஒன்றிணைக்கிறது; இவர்கள் கறுப்பர் இனம் மீதான இனவெறிக்கு தீர்வு காணவும் உண்மையான மாற்றத்தைத் தூண்டவும் செயல்படுவார்கள். இதன் வகையில் முதலாவதான இந்த மாநாட்டை நடத்துவதை சாத்தியமாக்க உதவிய தனது கூட்டாளிகளுக்கு ப்ராம்ப்ட்டன் நகரம் நன்றி தெரிவிக்கிறது. ”

- *டேவிட் பேர்ரிக், தலைமை நிர்வாக அதிகாரி, ப்ராம்ப்ட்டன் நகரம்*

”கறுப்பர் இன மக்களை சமூகத்தின் அனைத்து பகுதிகளிலும் முழுமையாக பங்கேற்பதைத் தடுக்கின்ற வகையில் காலம் காலமான தடைகளை நமது வரலாறு உருவாக்கி வைத்துவிட்டது. டோரோன்ட்டோ நகரம் இந்த மாநாட்டை முடுக்கி விடும், மற்றும் கறுப்பர் இனம் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்பினை நிறுவுவதில் நகர நிர்வாகம் செய்துள்ள முக்கிய பணிகள் பற்றிய நுணுக்கமான விளக்கக்காட்சியைக் கொடுக்கும், அதன்பிறகு இந்த பணிக்கு அர்ப்பணிப்பு கொண்ட ஊழியர்களுடன் சேர்ந்து ஒரு வட்டமேசை விவாதம் நடைபெறும். கறுப்பர் இனம் மீதான இனவெறி என்பது உலகளாவிய, தேசிய மற்றும் உள்ளூர் பிரச்சினையாகும்; கருப்பர் மீதான இனவெறியை ஒழிப்பதற்கும், கனடாவில் உள்ள கறுப்பின சமூகங்களுக்கான பொருளாதார அதிகாரமளிப்புக்கும், நாடு முழுவதும் உள்ள நகரங்களுடன் இணைந்து பணியாற்றுகின்ற நகரங்கள் அனைத்தும் சேர்ந்த ஒரு தேசிய கூட்டணியை உருவாக்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். நாம் ஒன்றிணைந்து செயல்பட்டால் முன்னெப்போதுமில்லாத வகையிலான இலக்குகளை, நாம் அடைய முடியும். ஒரு கட்டமைப்பையே மாற்றக்கூடிய கட்டமைப்புதான் நாம். "

- *க்வினெத் சாப்மன், முதுநிலை ஆலோசகர், பொருளாதார அதிகாரமளிப்பு மற்றும் கறுப்பர் இனம் மீதான நிறவெறி எதிர்ப்பு அமைப்பு, ப்ராம்ப்ட்டன் நகரம்*

“டோரோன்ட்டோவில் கறுப்பர் மீதான இனவெறி எதிர்ப்பு அமைப்பை நிறுவுவது என்பது, அவசியம் என்பது மட்டுமல்லாமல், நமது நகரத்தில் கறுப்பர் இனம் மீதான இனவெறிக்கு தீர்வு

காண்பதற்கும் அதை ஒழிப்பதற்கும் நமது உறுதிப்பாட்டை நிரூபிப்பதற்கும் அது ஒரு வழியாகும். டொராண்டோ நகரத்தைச் சேர்ந்த ஊழியர்கள் GTA-வில் கறுப்பர் இனம் மீதான இனவெறியை எதிர்த்துப் போராடுவதற்கான ப்ராம்ப்ட்டன் நகரின் முயற்சியில் பங்கெடுத்துக் கொள்வதிலும், பிராந்தியத்துடன் சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வதிலும் நான் மகிழ்ச்சியடைகிறேன், இதனால் நாம் அனைவரும் இனவெறியைக் கையாள்வதில் ஒருங்கிணைந்த சுமுகமான முயற்சியை எடுக்க முடியும். நமது செயல் திட்டத்தை தொடர்ந்து நடைமுறைப்படுத்துவதாலும், டோரோன்ட்டோவின் கறுப்பர் இன சமூகத்தின் குரல்களுக்கு செவிமடுப்பதை உறுதி செய்வதாலும்,தனது தலைமைப்பண்பு மற்றும் கடின உழைப்புக்காக CABR பிரிவு அங்கீகரிக்கப்படுவதைக் கண்டு நான் எப்போதும் பெருமைப்படுகிறேன். உலகிலேயே பலதரப்பட்ட மக்களை அதிகம் கொண்ட நகரம் டோரோன்ட்டோ நகரமாகும்; நமது நகரத்தில் இனவெறிக்கு இடமில்லை என்பதை நாங்கள் தெளிவுபடுத்தியுள்ளோம். இப்போதுள்ள இந்த சவாலை எதிர்கொள்ள நாம் நகர அளவில் மட்டுமல்லாது, பிராந்திய அளவிலும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். நாம் ஒன்றாக கறுப்பர் இன சமூகங்களுக்கு அதிகாரம் வழங்கலாம் மற்றும் அனைவருக்கும் சம வாய்ப்புகளுடன் வாழ ஒரு பாதுகாப்பான இடத்தை உருவாக்கலாம். ”

- *ஜான் டோரி, மேயர், டோரோன்ட்டோ நகரம்*

“ஒரு மாகாணமாக இருந்தபடி நாம் கொண்டிருக்கும் வலிமையானது, மக்களாக இருக்கும் நம்முடைய பலத்தைப் பொறுத்தது. தனது வாக்கினைக் காப்பாற்றக்கூடிய ஒரு சிறந்த நகரம் ஒன்ட்டேரியோ எனும் சிறந்த நிலையை அடைய, பரந்துபட்ட கூட்டாண்மை மற்றும் அடிமட்ட தலைமை ஆகிய இரண்டுமே தேவை. ஒன்ட்டேரியோ குடியிருப்புவாசி ஒவ்வொருவரும் வளர்ச்சியடைவதற்கான சமமான வாய்ப்பு உள்ள ஒரு மாகாணமாக உருவாக்க, நமது அரசாங்கம் செயல்பட்டு வருகிறது, அங்கு அனைவரும் செழித்து வாழ முடியும். கறுப்பர் இன சமூகங்களை மேம்படுத்துவதற்கான பயனுள்ள தீர்வுகளைக் கண்டறிய உதவுவதற்காக ஒன்றிணைந்து செயல்படும் நமது கூட்டாளர்கள் அனைவருக்கும் ஒன்ட்டேரியோ அரசு நன்றி தெரிவித்துக் கொள்கிறது. ”

- *ஸில்வியா ஜோன்ஸ், சாலிசிட்டர் ஜெனரல் மற்றும் கறுப்பர் இனம் மீதான இனவெறி எதிர்ப்புக்கு பொறுப்பு வகிக்கும் அமைச்சர்.*

"AMO என்பது கறுப்பர் இனம் மீதான இனவெறி எதிர்ப்பு மற்றும் அவர்களுக்கான பொருளாதார அதிகாரமளிப்பு ஆகியவற்றுக்கு ஆதரவளிப்பதில் மகிழ்ச்சியடைகிறது. அப்படிச் செய்வதற்கு ஒன்றாக பனியாற்றுவது அவசியமாகும் மற்றும் அத்தியாவசியமாக எடுத்து வைக்கவேண்டிய ஒரு படியுமாகும்"

- *பெட்ரா உல்ஃபேப்பெய்ஸ், இயக்குனர், உறுப்பினர்சேர்க்கை மையம், ஒன்ட்டேரியோவின் நகராட்சிகளுக்கான சங்கம்*

"பொருளாதாரவகையில் சேர்த்துக்கொள்ளாதிருத்தல் மற்றும் கறுப்பர் இனம் மீதான இனவெறி ஆகியவற்றை நாம் சமாளிக்காவிட்டால், கனடாவில் கறுப்பர் இன் சமூகங்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு தீர்வு காண முடியாது. இத்தகைய சவால்கள் தலைமுறை தலைமுறையாக இருப்பவை மற்றும் புரையோடிப்போனவை, மற்றும் தொடர்ச்சியான ஒத்துழைப்பு சுற்றுச்சூழல் ரீதியான தீர்வுகள் தேவைப்படுகின்றன. பொருளாதார வகையில் மற்றும் குடிமையில் அனைவரையும் சேர்க்கின்ற முக்கிய தளங்களாக இருக்கின்ற கனடா நாட்டு நகராட்சிகள், இதற்கான முக்கிய பங்காற்றுவது அவசியமாகிறது. நல்ல உத்தேசம் கொண்ட வகையிலான தேசிய கூட்டணி அல்லது நகராட்சிகளின் நெட்வொர்க் மூலம் ஒருவருக்கொருவர் ஆதரவளிப்பது மற்றும் செயல்பாட்டுவகையில் கற்றுக்கொள்ளுதல் ஆகியவற்றின் மூலம் இது தொடங்குகிறது. "

- *அமானுவெல் மெல்லெஸ், செயல் இயக்குனர், கறுப்பர் இன சமூகங்களின் முன்னேற்றத்திற்கான நெட்வொர்க்*

-30-

**கனடா நாட்டில் மிக விரைவாக வளர்ந்து வரும் நகரங்களில் ஒன்றான ப்ராம்ப்ட்டன் தன் வசத்தில் 650,000 மக்களையும் 70,000 வணிக அமைப்புக்களையும் கொண்டிருக்கிறது.** நாங்கள் செய்யும் ஒவ்வொரு காரியத்திலும் பொதுமக்களை மனத்தில் வைத்தே செய்கின்றோம். பலதரப்பட்ட சமுதாயத்தினர் எங்களுக்கு வலு சேர்க்கின்றனர், முதலீட்டை நாங்கள் ஈர்க்கிறோம், தொழில்நுட்பரீதியில் மற்றும், சுற்றுச்சூழல்ரீதியிலான புதுமைப் படைத்தலில் முன்னணி வகிப்பதற்கான பயணத்தில் நாங்கள் சென்றுகொண்டிருக்கிறோம். பாதுகாப்பான, நிலைத்து நிற்கவல்ல மற்றும் வெற்றிகரமான ஆரோக்கியமிக்க ஒரு நகரைக் கட்டமைப்பதற்கான வளர்ச்சிப்பாதையில் நாங்கள் பங்கு வகிக்கிறோம். Twitter, Facebook, மற்றும் Instagram ஆகியவற்றில் எங்களுடன் இணையுங்கள். www.brampton.ca இல் இன்னும் தெரிந்துகொள்ளுங்கள்.

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் பரிமாற்றம்
ப்ராம்ப்ட்டன் நகரம்
905-874-3426 | Monika.Duggal@brampton.ca